1967 ஜூலை 11

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தற்போது செங்கல்பட்டு நகராட்சியில் புதைவடிகால் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, may I know whether any request was made by the Chingleput Municipality regarding the underground drainage system, what is the grant which they wanted from the Government and whether the Government have decided to oblige them with that grant?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I have no information about it.

"அரவட்லா" மலைமீது சாலை அமைத்தல்

*271 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பரா—

குடியாத்தம் தாலுக்காவிலுள்ள "அரவட்லா" மலைமீதுள்ள கிராமங்களுக்கு செல்ல ரோடு போடும் விஷயம் தற்போது என்ன நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பஞ்சாயத்து நிறுவனம் இவ்வேலையை நிதி நிலைமைக்கேற்றபடி பகுதி பகுதியாக மேற்கொள்ளும். இவ்வருடம் ஒரு பகுதியில் வேலை நடக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இது பேரணும்பட்டு தொகுதியைச் சேர்ந்த பிரதேசம். அந்த மலையில் நாலைந்து கிராமங்கள் உள்ளன. இன்றும் அந்த மலையில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான உணவாக இருந்தாலும் சரி அல்லது எதுவாகயிருந்தாலும்சரி மலைக்கு மேலே கொண்டு போகவும், கீழே கொண்டு வரவும் உள்ள ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களை கழுதைகளின் மேல்தான் எடுத்துச் செல்கிருர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? பாரஸ்ட் கண்ட்ராக்டர்ஸ், கண்ட்ராக்ட் எடுப்பவர்கள் சில ரோடுகளை ஃபார்ம் செய்திருக்கிருர்கள், விறகு போன்றவைகளைக் கொண்டு செல்வதற்கு. ஆகவே அந்த ரோடுகளை செப்பனிட்டு நல்ல ரோடுகளாகப் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தப் பாதையின் நீளம் ஆறு மைல் தூரம். கழுதைகளின் மேல் ஏற்றிச் செல்வது பற்றி விவரங்கள் இல்லை. நிதிநிலைமை இடம் கொடுக்கிற வகையில் முயற்சி எடுக்கப்படும். நிதிநிலைமை கட்டுப்பாடு காரணமாக பகுதி பகுதியாக எடுத்துக் கொண்டு நடைமுறைப்படுத்தப் படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : அந்தக் கிராமங்களுக்குச் செல்லும் பாதை காட்டு இலாகா சம்பந்தப்பட்டதாக இருக்கிற காரணத்தினால் கனம் காட்டு இலாகா அமைச்சர் அவர்களை வற்புறுத்தி அந்த ரோடைப்போடும்படி கனம் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டு அதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது காட்டு இலாகாவிலிருந்து பஞ்சாயத்து ஊராட்சி ஒன்றிப்புக்கு 1963-ல் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படி பெற்றுக்கொண்ட பிறகு மீண்டும் அவர்களை வற்புறுத்துவது இயலாத ஒன்றாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு :—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) எதிர்க்கட்சித் தலைவர் 'நவசக்தி' நாளிதழுக்கு அளித்த அறிக்கை.

MR. SPEAKER: The hon. Member, Dr. Hande raised a motion of privilege against the hon. the Leader of the Opposition for having given a statement to a daily paper known as 'Navasakthi'. I promised to give my ruling on that subject to-day. I mentioned that, while giving my ruling, I would also take into account the further statement made on the floor of the House by the hon. the Leader of the Oppositon. The hon. the Leader of the Opposition said on the 7th—

'நான் சொன்னதெல்லாம் முதலமைச்சர் பேசினதிலே எந்தத் தவறு என்றும் நான் சொல்லவில்லை' . . . . பத்திரிகைச் செய்திகள் விட்டுவிட்டு வந்துகொண்டிருக்கின்றன.)'

In view of the statement made by the hon. the Leader of the Opposition, I have to see whether there still exists any ground for a privilege motion against the hon. the Leader of the Opposition. I have already stated several times in this House that when an hon. Member makes a statement in this House that he did or did not make a statement outside the House, what he stated on the floor of the House should be taken as final; that applies to the hon. the Leader of the Opposition. Therefore, I have to assume that what the hon. the Leader of the Opposition stated on the floor of the House is final, and could not be questioned either by this House or any committee of this House. That being so, I have to hold that no *prima facie* case exists against the hon. the Leader of the Opposition.